## இறைவா! நீயே அறிவைத் தருவாய்

نَوِّرْ إِلٰهَ السَّمَا     قَلْبَ الْغَرِيْبِ كَمَا
نَوَّرْتَ قَلْبَ إِمَا     مِ النَّاسِ غَزَّالِ
يَا رَبِّ أَعْطِ لَنَا     عِلْمًا وَّفَهْمًا كَمَا
أَعْطَيْتَ يَا رَبَّنَا     لِلشَّيْخِ غَزَّالِ
يَا رَبِّ يَسِّرْ لَنَا     كُلَّ الْأُمُوْرِ كَمَا
يَسَّرْتَ يَا رَبَّنَا     لِلْهَادِيْ غَزَّالِ
يَا رَبِّ بَلِّغْ لَنَا     كُلَّ الْمُرَادِ كَمَا
بَلَّغْتَ يَا رَبَّنَا     مَقْصُوْدَ غَزَّالِ
يَا رَبِّ إِقْبَلْ دُعَا     نَا يَا مُجِيْبُ كَمَا
قَبِلْتَ يَا رَبَّنَا     لِلْعَالِيْ غَزَّالِ
يَا رَبِّ بِالْمُصْطَفٰى     بَلِّغْ مَقَاصِدَنَا
وَاسْمَحْ لَنَا مَا مَضٰى     يَا وَاسِعَ الْكَرَمِ



# அதபுமாலை

*தற்சிறப்புப் பாயிரம்*

***காப்பு - கலிவெண்பா***

**முந்தவொளிவா முஹம்மதர் ரஸூல் பொருட்டா**
**லிந்தஜமா னாடவரு மேந்திழையுஞ் – செந்தழலில்**
**வேகாமற் சொர்க்கபதி வீடடைந்து வாழ்வதற்கு**
**வாகான ஷறஹின்வழி காண – ஆகமகிழ்**
**கொண்டதபு மாலையினைக் கூறவே மூவுலகும்**
**அண்டர் முதலாம் படைப்பதாமெவையும் – உண்டுபண்ணும்**
**நித்தனே சுத்தனே நீதிமறை விளக்கும்**
**கத்தனே நீயிதற்குக்காப்பு.**

படைப்பினங்கள் யாவற்றுக்கும் முதன்மையாக அல்லாஹ் வெளியாக்கிய நூர்முஹம்மது பிரகாசத்திற்கும் உரித்தான எம்பெருமானார் முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களின் பொருட்டால், இக்காலத்திலுள்ள ஆண்களும், பெண்களும் நரகில் சிக்காமல் மேலாம்பரமான சொர்க்க வாழ்வு பெற்று இன்புறுவதற்காகவும், சிறப்பான ஷரீஅத்தின் வழிநடந்து ஈட்டேற்றம் பெறுவதற்காகவும் மனநிறைவுடன் இந்த அபுதமாலையைக் கூறி முடித்திடுவதற்கு, மூவுலகையும் சிருஷ்டித்து வானவர் முதல் எல்லாப் படைப்புகளையும் உண்டுபண்ணி காத்து இரட்சிக்கும் இறைவனே, நித்தியமானவனே, தூய்மையானவனே, வேதநீதிமறை அருளிய நாயனாகிய அல்லாஹ்வே, நீதான் இதற்குக்காவல்!

**தொங்கல்**

**ஆதிபெரியோனே தம்பிரானே**
**ஆல மடங்கலும் படைத்தவனே**
**நீதி குறையாம லெவ்வுயிர்க்கும்**
**நித்த மிரணங்க ளீபவனே**
**சாதி யொழுங்கான அதபுமாலை**
**சகல மனுவோர்க்கு மெடுத்துரைக்கப்**
**பாத மிலுனைப் போற்றி பனுவல் செய்யப்**
**பராபரா நீயே காப்புத்தானே (1)**

ஆதி பெரியோனே இறைவனே அகில உலகத்தையும் படிடத்து நீதி தவறாமல் எல்லா எயிர்களுக்கும் குறைவின்றி நாள்தோறும் இரணங்கள் அழிப்பவனே! உயர்வும், ஒழுக்கமும் கருத்தாகக் கொண்டு பாடப்பெறும் இந்த அதபு மாலையை எல்லா மக்களுக்கும் எடுத்துரைக்க, பரகதி அடைய உன்னைப்போற்றி செய்யுள் வடிவில் இந்நூலைப் பாடிமுடிக்க, பராபரனாகிய அல்லாஹ்வே நீதான் காவல்.

**எல்லாப் புகழ்ச்சியும் அல்லாவுக்கே**
**ஏற்றமுள ஸலவாத்து ஸலாம்**
**எல்லா பறக்கத்தும் சங்கையுடன்**
**எண்ணமில் வெகு நீளமாகக்**
**குல்லா லந்தனில் வஸ்து வெல்லாம்**
**கூடிப்பிரிகிற நாள் வரையில்**
**சல்லாபர் நபீ முஹம்மதுமேல்**
**சாகஸன் மேகம்போல் சொரிந்திடுவான்** (2)

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே, மேன்மையான ஸலவாத்தையும், ஸலாமையும், எல்லாப் பறக்கத்துக்களையும், சங்கைகளையும் எண்ணி முடியாத அளவுக்கு அகில உலகங்களிலும் உண்டான படைப்பினங்களெல்லாம் கூடிப்பிரிகின்ற கியாமத்து நாள் வரையில் பரிந்துரையாளர் எம்பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீது, ஹையுல் கையூமாகிய அல்லாஹ் மேகம் போல நீடித்துச் சொரிந்தருள்வானாக!.

**நல்லார் நபீமார்க ளனைவோருக்கும்**
**நான்கு யார்கட்கும் நபீயுல்லாதன்**
**வல்லா ளருள்பெற்ற பெரியபிதா**
**வல்லோர் ஹம்ஜத்தும் அப்பாஸு க்கும்**
**பொல்லா துன்யாவி லிருக்கையிலே**
**பொன்னுர் மாராயம் பெற்றவர்க்கும்**
**வல்லா ரலிமகன் ஹஸனைனுக்கும்**
**வல்லோன் ரஹ்மத்துடண்டாக ஆமீன்** (3)

அவ்வண்ணமே நல்லார்களான நபிமார்கள் அனைவர் மீதும், நான்கு குலபாயே ராஷிதீன்கள் மீதும், நபிகள் நாதர் (ஸல்) அவர்களுடைய பெரிய தந்தையார் ஹம்ஜா நாயகம் (றலி) மீதும், இப்பொல்லாத உலகத்தில் வாழ்ந்திருக்கும் போதே சொர்க்கம் பற்றி நன்மாராயம் பெற்ற அஷரதுல் முபஷ்ஷராக்கள் மீதும், வீர அலி நாயகம் (றலி) அவர்கள் மக்களும், எம்பெருமானார் (ஸல்) உடைய பேரர்களுமான ஹஸன், ஹுஸைன் (றலி) மீதும் வல்லவனாகிய அல்லாஹ்வின் நல்லருள் கிருபை சதாவும் நிலவுக!

**அன்பியாக்கர சான வெங்கள்**
**ஆலநபீ மகளார் தமக்கும்**
**நம்பிராட்டி மா ரனைவருக்கும்**
**நபீயன்னை பிதா கிளையாருக்கும்**
**வம் புறாவை சுல் கரனியர்க்கும்**
**வண்மை முஹாஜிரீ னன்ஸாரிக்கும்**
**கும்பலாமஸ் ஹாபி மார்க்கும்**
**கோமான் ரிளுவா னுண்டாக ஆமீன்** (4)



நபிமார்களுக்கெல்லாம் அரசரான எங்கள் ஆல நபி (ஸல்) அவர்களது அருமை மகளார் பாத்திமா நாயகி (ரலி) அவர்கள் மீதும், நம் பிராட்டிமார்கள் (ரலி) அனைவர் மீதும், எம்பெருமானார் (ஸல்) அவர்களுடைய அருமை மாதா, பிதா, கிளையார்கள் அனைவர் மீதும் வம்பு ஏதும் அறியாத உவைசுல்கரனி (ரலி) அவர்கள் மீதும், வள்ளல் தன்மையுடைய முஹாஜிரீன்கள் அன்ஸாரிகள், அனைத்துஸஹாபாக்கள் மீதும் ஏக வல்ல சக்கரவர்த்தியாகிய அல்லாஹ் தஆலாவின் திருவுளப் பொருத்தம் என்றென்றும் உண்டாவதாக! ஆமீன்.

**வலியோன் தனக்காக பீஸபீலில்**
**வருந்தி உயிர்தனை யிழந்தோருக்கும்**
**ஒலிமார் உலமாக்கள் இமாம்களுக்கு**
**முண்மை முஹ்யித்தீன் பீர்தமக்கும்**
**பொலிவாம் நாகூரில் மறைந்திருக்கும்**
**போற்றலுள வொலி காதிருக்கும்**
**மலிவால் காஹிரி லொலிமாருக்கும்**
**மன்னான் றஹுமத்துண்டாக ஆமீன்.** (5)

அல்லாஹ்வுக்காக பீஸபீலில் உயிர்த் தியாகம் செய்த ஷுஹதாக்கள் மீதும், அவுலியாக்கள், உலமாக்கள், இமாம்கள் மீதும், சத்தியவேந்தரான ஷெய்கு முஹ்யித்தீன், பீரானேபீர் (ரலி) அவர்கள் மீதும், சிறப்புடைய நாகூரில் மறைந்திருக்கும் போற்றலுக்குரிய காதர் ஒலி (ரலி) அவர்கள் மீதும் தயாளனாகிய அல்லாஹ் தஆலாவின் நல்லருள் என்றென்றும் உண்டாவதாக! ஆமீன்

**அஹதா னுதவியா லதபுமாலை**
**அன்பா யுரைக்கின்றேன் கேட்டறிந்து**
**பகர மிகவுள்ள ஆடவரும்**
**பாவை மார்களும் பலன்பெறவே**
**பகை யிலாஅமல் செய்வாராகில்**
**படைத்தோன் பொருத்தமும் றஹ்மத்துடன்**
**மகர மீன்சினை விருந்துமுண்டு**
**மக்கா நபீயுடன் சேர்வார்களே.** (6)

ஏகனாகிய அல்லாஹ்வின் உதவியால் அதபு மாலையை அன்புடன் உரைக்கிறேன். சிறப்புடைய ஆண்களும், பெண்களும் இதன்படி அமல்செய்து பலன்பெற வேண்டும் என ஆசிக்கின்றேன். இவ்வண்ணம் மாறுபடாமல் அவர்கள் அமல் செய்வார்களாயின் சிருஷ்டிகர்த்தாவாகிய அல்லாஹ்வின் கிருபா கடாட்சம் கிடைத்திடும். சொர்க்கலோகத்தில் ஈடு இணையில்லாத பாக்கியங்கள் கிடைத்திடும். விசேஷமான சொர்க்க மகர மீன் விருந்து கிடைத்திடும். யாவற்றுக்கும் மேம்பட்டு மக்கநகரில் உதித்த எம்பெருமானார் ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய சமீபத்தில் மறுமையில் முடுகி நெருங்கி இருக்கும் பாக்கியமும் வாய்த்திடும். கிருபையுள்ள அல்லாஹ் நம்அனைவருக்கும் அத்தகைய நற்பாக்கியத்தை தந்தருள்வானாக! ஆமீன்.

# கலிமா வரிசைப்படலம்

**வரிசைக்கலிமாவை தினங்கள் தோறும்**
**வண்மையுட ஹூறு மட்டோதினால்**
**இரவினொளிபோல நன்றாகவே**
**யவ்மல் கியாமத்தில் வருவானென்றே**
**அருக்க னழைப்பித்தே அலிக்காகவே**
**அஸ்று தொழு மட்டு நிறுத்திவைத்த**
**அரிய நபியுல்லா உரைத்தாரென்றே**
**அழகான யார்க ளருளிச்செய்தார். (1)**

வரிசை மிக்க கலிமாவை தினந்தோறும் (இஹ்லாஸ்) சித்த சுத்தியுடன் 100 தடவை யார் ஓதி வருகிறாரோ அவர் இறுதித் தீர்ப்பு நாளன்று சூரிய பிரகாசஜோதியுடன் வருவார் என்று ஹழ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு ஒரு நாள் அஸறுத் தொழுகை தவறி விடாமலிருப்பதற்காக சூரியனை அஸ்தமிக்க விடாமல் நிறுத்தி வைத்த அத்தகைய ஆற்றலுடைய அருமை நபி நாயகம் (ஸல்) உரைத்தார் என்பதாக அவர்களது அருமை ஸஹாபாத் தோழர்கள் (றலி) அருள் செய்துள்ளார்கள்

**எல்லா திக்ரிஹும் வரிசையான**
**ஏற்றமுள திக்ரு லாஇலாஹ**
**இலலல் லாவென்று சொன்னாரெழில்**
**இந்தை யிருபாதியாய் அழைத்தோர்**
**நல்லார் சொற்கேட்டு நயம்பெறவே**
**நாடித் தினந்தோறு மத்திக்கிரை**
**சொல்லாற் கருத்தோடு நன்றாகவே**
**சூழ்ந்து திக்ரு செய்து கொள்வீர்களே. (2)**

"திக்ருகளில் எல்லாம் சிறந்தது லாஇலாஹ இல்லல்லாஹு என்பதே" என்று சந்திரனை இருபாதிகளாகப் பிளந்துவரச் செய்த எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அருள் செய்துள்ளார்கள்.

நல்லார்களான நாதாக்களின் ஞானபோத மொழிகளை ஏற்று நன்மைகளைப் பெற்று நயமுறும் வண்ணம் மனமுவந்து நாள்தோறும் அந்த திக்ரை அதன் கருத்தை உணர்ந்து வாக்கும் மனமும் ஒத்து, நாவும் கல்பும் ஸிர்ரும் ஒன்றுபட்டு, ஹல்காக் கூடி சூழ்ந்து செய்து வருவீர்களாக!



**அவ்வல் கலாமு மாகிர்கலாமும்**
**அழகாம் கலிமாவா லாயிருந்தால்**
**ஒவ்வாப் பிழைகோடி யுண்டாகிலும்**
**உடையோன் பொறுத்துப் பின்னெழுப்பும்போது**
**செவ்வா மதிபோலே துலங்கிடவே**
**சிறப்பா முகமுள்ளோ னவனாகவே**
**கவ்வு வருத்தமொன் றில்லாமலே**
**கலந்து கூடுவான் நல்லோருடன். (3)**

ஆதியிலும், ரூஹு பிரிகின்ற கடைசி கட்டத்திலும் எவருடைய உரை அழகிய கலிமாவைக் கொண்டாகியுள்ளதோ அவர் கோடிக்கணக்கான பாவம், பிழைகள் செய்திருப்பினும் அவருக்கு அல்லாஹ் பிழை பொருத்தருளி, மறுமை நாளையில் அவரை எழுப்பும் போது சந்திர பிரகாசத்தையுடைய முகத்துடன் எழும்பச் செய்வான். மேலும் அவர் மறுமையின் சங்கடம் எதுவும் பாதித்திடாமல் ஸாலிஹீன்களான நல்லோர்களுடன் ஒன்றாக மறுமையில் சேர்ந்திருப்பார்.

**நல்ல கலிமாவாம் தையிபுவை**
**நாடி யொருதட்டில் வைக்கப்பட்டால்**
**சொல்வு மறுதட்டி லேழுவானம்**
**சோதி மலக்குக ளெனையன்றியே**
**எல்ல வருமொன்றா யேழுபூமி**
**இசையும் படிவைத்து நிறுத்திடினும்**
**வெல்லுங் கலிமாதான் கனத்திடுமே**
**வெற்றி பெறநாயன் சொன்னானென்றார் (4)**

"நலமுடைய கலிமாதையிபுவை, தராசினுடைய ஒரு தட்டிலும், ஏழுவானம் அவற்றிலுண்டான சோதிப் பிரகாச அமரர்கள், ஏழுபூமி, அவற்றிலுண்டானவை என்னையன்றியுள்ள, ஏனைய எனது படைப்பினங்கள் அனைத்தையும் மறு தட்டிலும் வைத்து நிறுக்கப்பட்டாலும் வெற்றியுடைய அந்தக் கலிமாதான் கனத்து முறுகி நிற்கும் என்பதாக நாம் வெற்றி அடையும் வண்ணம் நாயன் கூறினான்" என்பதாக நாயகம் (ஸல்) அறிவித்துள்ளார்கள்.

**சங்கை கலிமாவென் கோட்டையென்றும்**
**சடுதி யதிற்புகுந்தோர் களென்றனன்**
**பங்க மதாபைவிட் டகல்வாரென்றும்**
**படைத்தோ னுரைத்தானென் றுரைத்த லோடும்**
**உங்க ளுடலுக்கு ஐக்காத்தாவது**
**உண்மைக் கலிமாவும் தஹ்லீலென்றும்**

**கங்கை புனல்ஸாவத் தாரில் வற்ற**
**கீர்த்தியாய்ப் பிறந்தோ குரைத்தார். (5)**

"சங்கையுள்ள கலிமா எனது கோட்டை விரைந்து அதில் புகுந்திட்டவர்கள் என்றன் பங்கமிக்க தண்டனைகளை விட்டு ஈடேற்றம் பெற்றவர்களாவார்கள் என்று அல்லாஹ் உரைத்தான்". எனவும்" உங்கள் உடலுக்கு ஜக்காத்தாவது லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி என்ற உண்மைக்கலிமாவும் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற தஹ்லீலுமாக இருக்கும்" எனவும் வற்றாத ஸாவாவை வற்றச் செய்து அதிசய மு·.ஜிஸாத்துடன் புகழுறப்பிறந்த எம்பெருமானார் (ஸல்) அவர்கள் உரைத்துள்ளார்கள்.

## குருட்டு இபுலீஸ் கூறி இருப்பதனைக் கேளுங்கள்

**குருட்டு இபுலீஸு சொன்னது கேள்**
**கூட்ட மனிதரைப் பாவத்தினால்**
**மருட்டு தல்கொண்டு ஹலாக்குவேன்மென்றன்னையே**
**வாகா யவர்களு மென்றன்னையே**
**இருட்டு தனைநீக்கும் கலிமாக்கொண்டும்**
**இயல் பாமிஸ்திகு பாருகொண்டும்**
**பிரட்டி ஹலாக்காக்கி வீடுவாரென்றே**
**புரட்டி விரட்டுவீர் இபுலீஸையே. (6)**

"பாவத்தினால் மருட்டி மனித இனத்தாரைக் கூட்டம் கூட்டமாக நாசத்தில் ஆழ்த்துவேன். அவர்களுள் என்னை நாசத்திலாழ்த்தி துரத்துவது உண்டு. அது எப்படி யெனில் அந்தகார இருளை விட்டும் ஜோதிப் பிரகாசத்தில் ஆக்கி வைக்கும் வல்லமையுடைய கலிமாவைக் கொண்டும் பிழை பொறுக்கத் தேடும் இஸ்த்திகுபாரைக் கொண்டும் அவர்கள் என்னை கதிகலங்கச் செய்து பிரட்டி விரட்டுவதாகும்" என்று அவன் கூறியுள்ளான். அந்தப் பொட்டையன் இபுலீஸை இத்தகைய வல்லமையுடைய கலிமா, இஸ்த்திகுபாரு கொண்டு அடித்து துரத்தி விரட்டுவீர்களாக!"

# ஈமான் கொள்ளுமியல்புப் படலம்

**அல்லாஹ் ஒருவன் தானெல்லாத்தையும்**
**அமைத்து அழித்தெழுப்புவனாமென்றும்**
**வெல்லும் மலாயிக்கத் தெல்லோர்களும்**
**விதித்தோன் பணிவிடையடிமையென்றும்**



**சொல்லு புர்கானும் வேதங்களும்**
**தூய்யோன்றிருவுள வசனமென்றும்**
**நல்ல முஹம்மதும் நபிமார்களும்**
**நாயன் தூதர்களுண்மை யென்றும்**

## உண்மை விசுவாசி (மு·மின்) பரிபூரணமாக விசுவாசம் (ஈமான்) கொள்ள வேண்டிய விஷயங்கள்.

ஏகனாகிய அல்லாஹ்தான் எல்லாவற்றையும் படைத்தவன். படைத்தவைகளை அழிக்கவும், திரும்ப உயிர்ப்பிக்கவும் அவன் வல்லமையுடையவன் என்றும், மலக்குகள் எனும் அமரர்கள் யாவரும் அவனது ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டு பணிந்து ஏவல் செய்யும் அடியார்கள் என்றும் புர்கான் என்னும் பரிசுத்த திருக்குர்ஆனும், அதற்கு முந்திய தௌராத்து, ஜபூர், இன்ஜீல் முதலிய சுத்த சத்திய வேதங்களும் இறைவனது திருவுள வசனங்களாகு மென்றும், முஹம்மது (ஸல்) அவர்கள், அவர்களுக்கு முன்னவதரித்த ஏனைய நபிமார்கள் ஆகியோர் மாந்தர்பால் இறைவனா லனுப்பப்பட்ட உண்மை தீர்க்கதரிசிகளாவரென்றும்,

**அல்லும் பகலற்றேயொரு காலமாய்**
**ஆகுங் கியாமந்தா னொடுக்க மென்றும்**
**குல்லும் படைப்பெல்லா மெழுப்பியந் நாள்**
**குறித்து வருநன்மை தீமைகளும்**
**சொல்லும் படிகேட்டு மனுஜின்னுக்குஞ்**
**சுவர்க்க நரகமுங் கொடுப்பா னென்றும்**
**வல்லோன் விதிப்படி நன்மை தீமை**
**வந்தாலும் நன்மைக் குபயமென்றும் (2)**

இரவு, பகல் என்பதின்றி ஒரே காலமாக ஆகும் கியாமத்து ஒடுக்க நாள் உண்டென்று, அந்நாளில் அழிந்திறந்துபோன மனு, ஜின் வர்க்கத்தார் எல்லோரையும் திரும்ப உயிர்த்தெழும்பி அவரவர்களது நன்மை, தீமை பற்றி கேள்வி, கணக்கு கேட்டு நல்லவர்க்கு சுவர்க்க வாழ்வையும், தீயவருக்கு நரக வாழ்வையும் அல்லாஹ் அளிப்பான் என்றும் - நன்மை, தீமையிரண்டும் அல்லாஹ் விதித்த விதிப்படியுள்ள தென்றும், எனினும் அவன் நன்மைக்கு உதவியாளனேயல்லாது தீமைக்கு உதவியாளன் அல்லன் என்றும்,

**எல்லாமுடையவன் அல்லாஹ்வென்றும்**
**ஈமான் நிலைமையுமிப்படியே**
**அல்லா(ஹ்) நபி உம்மத் தெல்லாருக்கும்**
**ஆன ஈமானந்தீனு மென்று**

**வல்லோனிறக்கிய வேதத்திலே**
**வந்த வசனமென் றறிந்துணர்ந்து**
**சொல்வுஞ் செயல்களும் நினைவுமொன்றாய்**
**துய்யோன் றனை நித்தம் வணங்குவீரே. (3)**

எல்லாமுடையவன் அல்லாஹ்வென்றும் ஆக இத்தியாதி விஷயங்களை கொண்டும் பரிபூரண விசுவாச நம்பிக்கை (ஈமான்) கொள்ளல் வேண்டும்.அல்லாஹ்வின் திருதூதர்கள், அன்னாரைப் பின்பற்றிய சமூகத்தவர்கள் ஆகியோர் பூணும் விசுவாசமும், ஒழுகிய சன்மார்க்க நெறியும் இவ்வாறே என்று அல்லாஹ் தனது திருமறையிலே குறிப்பிட்டுள்ளானென்பதை பிசகற அறிந்துணர்ந்து சொல்லும், செயலும் வாக்கும் மனமும் ஒத்து தூய இறைவனை நித்தமும் வணங்கி வழிபடுவீர்களாக!

**இருளாம் கப்ரதுமதன் அதாபும்**
**இறங்கி யிருவும்பர் கேள்வி தானும்**
**திரளாங்கூட்டத்தை யெழுப்புதலுந்**
**தெரிந்த குற்றத்தோர் பிரியுதலும்**
**அருளாம் ஷபா அத்துமிறை ஹிஸாபும்**
**அமளி வருத்த மீஸான் தராசும்**
**பொருளாம் சொர்க்கம் நரிவைகளெல்லாம்**
**பொருப்பாம் ஹக்கென்றே ஈமான் கொள்வீர் (4)**

இருளடர்ந்த சமாதிக்குழியும், இரு அமரர்களின் கேள்விகளும், அங்குண்டாகும் தண்டனைகளும் உண்மை. கியாமத்தில் யாவரும் திரள் திரளாக எழுப்பப்படல் உண்மை - இறைவனது கேள்வி, கணக்கு விசாரணை உண்டென்பது உண்மை - நல்லடியார்களை விட்டும் தீயவர்களைத் தனிப்படப் பிரித்தல் உண்மை - எம் பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்களுடைய அருளன்பு நிறைந்த ஷபாஅத்து எனும் பரிந்து பேசல் உண்டு என்பது உண்மை - மறுமையின் அமளி, மீஸான் என்னும் நியாயத் தராசு,சுவர்க்கம்,நரகம் ஆகியவை யாவும் உண்மை என்றும் அத்தியாவசியமாக(ஈமான்)கொள்வீர்களாக!

**இறையோன் றனக்குண்டாம் ஸிபாத்துகள் தான்**
**இருபதிருப்பது நாமெல்லோரும்**
**அறிய விதியாகும் துவக்கமில்லான்**
**ஆகிர் தீர்மான மவனுக்கில்லை.**
**குறிப்பாக வுஜூதுவுள்ளமையும்**
**கூட்டுந்துணையன்றி தனியேதானாய்**



**மறைவாய்த் தனித்தவன் அவனொருவன்**
**மறக்கும் படைப்புகட் கொவ்வாதவன் (5)**

அல்லாஹ்வைப் பற்றி நாம் அவசியம் அறிந்திருக்க வேண்டியஸிபத்து (லட்சணங்)கள் இருபது (1) வுஜூது என்னும் உள்ளமை. இதற்கு நப்ஸிய்யா வென்று பெயர் (2) கிதம் என்னும் துவக்கமில்லாப் பூர்வீகம். (3) அந்தம் இல்லா பகா எனும் தரிபாடு. (4) முகாலபத்து என்னும் படைப்புகளுக்கு ஒவ்வாமை. (5) தனியே தானாயிருத்தல் எனும் கியாமும் பிநப்ஸிஹி (6)வஹ்தானிய்யத் எனும் தனித்திருத்தல், பிந்திய இவ்வைந்து ஸிபத்துகளையும் ஸல்பிய்யா வென்று சொல்லப்படும்.

**அறிவுட னாட்டம் பார்வை கேள்வி**
**ஆகுந் தத்துவம் சீவன் பேச்சு**
**அறிவோ னாவின்றி பேச்சுமுள்ளோன்**
**ஆன செவியின்றி கேள்வியுள்ளோன்**
**குறிப்பாங் கண்ணன்றி பார்வையுள்ளோன்**
**கூடுந்துணையன்றி குத்ரத்துள்ளோன்**
**குறிப்பி லடங்காத ரூஹுவன்றி**
**குணமாம் ஹயாத்துள்ளோன்**
**நாட்டமுள்ளோன் (6)**

(7) இல்மு எனும் அறிவு. (8) இராதத்து என்னும் நாட்டம் (9) பஸற் என்னும் பார்வை (10)ஸம்உ எனும் கேள்வி (11) குத்ரத்து என்னும் தத்துவம் (12) ஹயாத்து என்னும் சீவன் (13) கலாம் எனும் பேச்சு. இவ்வேழுக்கும் மஆனிய்யா வென்று சொல்லப்படும். (14) ஆலிம் என்னும் அறிவுடையுயோனாயிருத்தல் (15) முரீது என்னும் நாட்டமுடையோனாயிருத்தல் (16) பஸீறு என்னும் பார்வை யுடையோனாயிருத்தல் (17) ஸமீஉ என்னும் கேள்வியுடையோனாயிருத்தல் (18) காதிரு என்னும் தத்துவமுடையோனாயிருத்தல் (19) ஹையு என்னும் சீவனுள்ளோனாயிருத்தல் (20) முதகல்லிம் என்னும் பேச்சுடையோனாயிருத்தல். இவ்வேழும் மஃனவிய்யாவென்று சொல்லப்படும்.

இன்னும் அல்லாஹ்வுக்கு இருபது ஸிபத்துகள் அவை. அவற்றிற்கு முஸ்தஹீலா (அசம்பாவிதமானவை) என்று பெயர். உள்ளமைக்கு மாற்றாக இல்லாமை, பூர்வீகத்திற்கு மாற்றம் அபூர்வம், தரிபாட்டிற்கு மாற்றம் தரிபாடற்றிருத்தல் ஹயாத்துக்கு மாற்றம் மௌத்து (மரணித்தல்) என்பன போன்றவைகளாகும். இந்த முஸ்தஹீலான இருபது ஸிபத்துகளும் அல்லாஹ்வுக்கு ஒவ்வாதவை. இவைகளை நாம் காதினாற் கேட்காத விதமாயும், நாவினால் சொல்லாத விதமாயும், மனதினால் நினையாத விதமாயுமிருக்க வேண்டும். இடம் பாடுடையதைச் செய்தல் அல்லது விடுதல் என்னும் ஸிபத்து ஜாயிஸாவும் ஒன்றுண்டு. இவ்வாறு பல பிரிவுகளுடன் ஆக மொத்தம் ஸிபத்துக்கள் நாற்பத்தொன்று.

**இந்தவிருபது ஸிபாத்த தெல்லாம்**
**இறையோன் தனக்குத் தான் வாஜிபாகும்**
**சொந்த மாதா பிதாவுமில்லை**
**சொகுசாம் பெண்சாதி தானுமில்லை**
**சொந்தமாம் ஆண் பெண் மக்களில்லை**
**தோழர் துணையில்லை நாயனுக்கே**
**அந்த முடனிவையெல்லாத்தையும்**
**அறிந்து நிர்ணயங் கொள்வீர்களே.**

இறைவனைப் பற்றிய கடமையான இந்த இருபது ஸிபத்துகளையும், அவனுக்கு மாதா, பிதா இல்லை. மனைவி - மக்களில்லை. தோழர் துணையுமில்லை என்ற இந்த விஷயங்களையும், முன் கூறப்பட்டவைகளையும் யாவற்றையும் அறிந்து நல்ல நிர்ணயங் கொள்ளுங்கள்.

**ஊணில்லாதவன் உறக்கமுல்லாதவன்**
**உண்டாம் வஸ்த்துகள் இவன் போலில்லை**
**ஆணில்லாதவன் பெண்ணுமில்லை**
**அவனல்லாதவை தேவையற்றோன்**
**பேணிப் படைப்புக்கெல்லா மிரணம்**
**பெருகக் கொடுப்பது கடனுமில்லை**
**ஊணியறிந்துதான் நாயன்றனை**
**உவப்பாய் வணங்கினால் உவப்புண்டாமே (8)**

அல்லாஹ் ஊண் உறக்கமற்றவன் - உண்டாம் வஸ்துக்களெதுவும் அவன் போலில்லை - அவன் ஆணுமில்லை - தன்னல்லாதவைகளை விட்டுத் தேவையற்றோன் - படைப்புகளுக் கெல்லாமிரணம் கொடுக்க வேண்டுமென்பது அவனுக்கு கடனில்லை என்ற இவ்விலட்சணங்களையும் நன்கறிந்து நாயனை நீங்கள் உவப்புடன் வணங்கினால் அவனது உவப்பு உங்களுக்குக் கிடைக்கும்.

# தொழுகையின் வரலாற்றுப் படலம்

## பெரும் பாவிகள்

**கலிமாதனைச் சொல்லி ஈமான் கொண்டு**
**கடனாம் பறுலுகளிறுக்காமலே**
**தலைமேல் இஸ்லா மென்றடையாளமும்**
**தாடி நிகாஹுடன் தோலறுத்தல்**
**பலமாம் இவை நாலும் போதும் போல**
**பெரிய பாவிகள் மிகுதியுண்டு**
**நலிவாயிருந்தாலும் வலிமையாலும்**
**நாளும் பாவியாய் நரகில் வீழ்வார்.**



கலிமாவை வாயளவில் மட்டும் மொழிந்து ஈமான் கொண்டு, முஸ்லிம் என்ற அடையாளத்திற்காக தலை மேல் தொப்பியணிதல், கத்னா (விருத்த சேதனம்) செய்தல், தாடி வைத்தல், திருமணம் புரிதல் ஆகிய இந்நான்குமேதான் இஸ்லாத்தின் அம்சங்கள், இந்நான்குமே போதுமானவை என்று கருதி, கடமையான பறுலுகளை நிறைவேற்றாமல் இருக்கும் பாவிகள் அனேகர் உண்டு. இத்தகையவர்கள்,வலிமையானவராயிருந்தாலும், வலிமையற்றவராயிருந்தாலும் பெரும்பாவிகளாய் நரகில் வீழ்வார்கள்.

# செயல் இல்லா வேடதாரிகள்

**ஈமான் தனைக் கொண்டும் இஸ்லாங்கொண்டும்**
**இறுக்கும் பறுலுகள் இறுக்காமலே**
**சீமான் விலக்கிய பாவங்களைத்**
**தெரிந்து விலக்காமல் உலகத்திலே**
**நாமாம் இஸ்லா மென்றிருப்போர்கள் தான்**
**நாளை கியாமத்து நாள் தனிலே**
**கோமான் லஃனத்தால் நபிமுனிவால்**
**கொடிய நரகத்தில் மடியவீழ்வார் (2)**

உண்மையான முறையில் ஈமான் கொண்டு, சரியான தன்மையில் இஸ்லாம் ஆகி, நிறைவேற்ற வேண்டிய கடமைகளைச் செய்வனே நிறைவேற்றாமலும், இறைவன் விலக்கிய பாவங்களையுணர்ந்து தவிழாமலும் பெயரளவில், வேஷத்தளவிலும், ஈமான், இஸ்லாமை வெளிகாட்டிக் கொண்டு நாம் தான் உண்மை முஸ்லிம்கள் என்ற எண்ணத்தில் கடமைகளை மறந்திருப்பவர்கள் அல்லாஹ்வின் முனிவுக்கும், நபி நாயகம் (ஸல்) அவர்களின் முனிவுக்கும் இலக்கானவர்கள். இவர்கள் தீர்ப்பு நாளன்று கொடிய நரகத்தில நரகத்தில் மடியவீழ்வார்கள்.

# தோணியை கவிழ்த்தோர்

**இஸ்லாம் மார்க்கத்தின் கோலம் கொண்டும்**
**எல்லா அமல்களும் செயவோரைப் போல்**
**அசலார் அறியவே அவரவர்க்கே**
**அரபு பாஷையாற் பேரும் வைத்து**
**நசலாங் காபிர்கள் செயலாகவே**
**நாட்டின் நடபடி பாவஞ் செய்தோர்**
**பிசலாம் மௌத்து வந்தடுக்கும் போது**
**பேணுந்தோணியைக் கவிழ்த்தோராவார் (3)**

அன்னவர்கள், எல்லா நற்கருமங்களையும் புரிபவர்களைப்போல் பாசாங்கு செய்து இஸ்லாமியக் கோலமும், நாமமும் சூடிக்கொள்வார்கள் ஆனால் அவர்களது செயல்களோ இருதய நசல் பெற்ற அவிசுவாசி (காபிர்) களது செயல்களாகவும், நாட்டின் நடபடி அனாச்சரமான இஸ்லாமுக்குப் புறம்பான பாவமானவைகளாகவுமே இருக்கும். பேணிப் பாதுகாக்க வேண்டிய ஆத்மா என்ற படகு பற்றி அலட்சியமாகவுள்ள அவர்களை மரணம் எனும் புயல் வந்தடுத்த போது ,தங்களது ஆத்மாவெனும் படகைத் தாங்களாகவே வேதனை என்ற கடலில் கவிழ்ந்தவன் கஷ்ட நஷ்டத்தையுணர்வார்கள். மரணப் புயலுக்கு முன்பே ஆண்டவனுக்கு வழிபட்டு உண்மையிலேயே நற்கருமங்கள் புரிந்திருந்தால், மரணப் புயலில் அவர்களது ஆன்மப் படகு கவிழாமல் வேதனைக் கடலினின்றும் நிவாரணம் பெற்று இன்ப சாகரத்தில் நிலைக்கும்.

## கொடியோர் வருகிறார்

**கொண்ட கோலத்தை வெளிகாட்டியே**
**கோமான் நீனுக்கு மாறாகவே**
**கண்ட பலவகை பாவஞ்செய்வோர்**
**கால முடிந்து பீன்கியாமமானால்**
**அண்டு மிவர்கள்தான் துனியாவிலே**
**அல்லாஹ் தனைப்பரி யாசஞ்செய்து**
**கொண்டு நடந்திட்ட பாவிகளாம்**
**கொடியோர் வருகிறார் அடியுமென்பான் (4)**

முஸ்லிம்களைப் போல வெளிக்குக் காண்பித்த இறைவனுடைய சன்மார்க்கத்திற்கு நேர்மாறாக நடந்து மனம்போன போக்கில் பலவிதமான பாவங்களைச் செய்யக்கூடிய இவர்களுடைய வாணாள் முடிந்து மரணித்து கியாமத்து நாளில் எழுப்பி நிறுத்தப்படுவார்கள். அவர்களை நோக்கி, "இதோ வரக்கூடிய இந்த பாவிகள் உலகத்திலே எனக்கு அஞ்சி நடக்காமல் கேலிப்பரிகாசம் செய்து மனம்போன போக்கில் நடந்த கொடிய பாவிகள். இவர்களை அடித்து வேதனை செய்யுங்கள்" என்று அமரர்களுக்கு அல்லாஹ் கட்டளையிடுவான்.

## அறிவும் அமலும் அற்றோர்

**வெட்கமிகவுள்ள மடவார்களும்**
**வெளியில் திரிகின்ற ஆடவரும்**
**ஹக்கன்றனை நித்தம் வணங்குதற்காங்**
**கனமாம் அறிவுகள் படியாமலும்**
**தக்க அமல்களைச் செய்யாமலுஞ்**
**சதமாய் துனியாவை விரும்பினோர்கள்**
**துக்க மாகிய நரகத்திலே**
**சேர்ந்து வைலாறைத் தொந்திப்பாரே (5)**



மெய்யனாகிய அல்லாஹ்வை நிதமும் வணங்குவதற்கு அவசியமான மேலான மார்க்க அறிவுரைகளைப் படியாமலும் தக்க நற்கருமங்களை செய்யாமலும் அற்ப உலக வாழ்வே சதமென்று நம்பி உலகை விரும்பி ஆகிரத்தை (மறுமையை) மற்ற ஆண்களும், பெண்களும், துக்கமாகிய நரகத்திலே சேர்ந்து, அங்குள்ள வைல் என்னும் ஆற்றில் பெருங்கேடுகளையடைவார்கள்.

## கீழ்மகன்

**முழுக்கும் ஒலுவையும் தொழுகை நோன்பும்**
**முழுதும் அறியாமல் வணங்காமலும்**
**அழுக்கின் சோரியும் பாராமலே**
**அதிலே தரிபட்டுப் பெற்ற பிள்ளை**
**ஒழுக்கமில்லாத ஹராமி யென்றே**
**உதாசினப்பட்டுத் திரியுமென**
**வெளுக்கு முன்னே வணங்கும் நல்லோர்**
**வேதவிதிப்படி விளம்பினரே. (6)**

"முழுக்கு, ஒலு, தொழுகை, நோன்பு, இவற்றின் வகை விவரங்களைச் சரிவர அறியாமலும், (இபாதத்து) வணக்கம் செய்யாமலும் இருப்போருக்கு, மாதவிடாய் - ஜுனுபு - முழுக்கு இவற்றினின்றும் பரிசுத்தமாகாத் தன்மையில் அழுக்கான இரத்தத்திலே தரிபட்டு பிறந்த பிள்ளை ஒழுக்கமில்லாத கீழ்மகனாகி உதாசினமடைந்து கேவல மாகத் திரியும்" என்று விடிவதற்கு முன்பாகவே விழித்து இறைவனை வணங்கி இபாதத்துச் செய்துவந்த மஹான்கள் வேத விதிப்படி கூறியுள்ளார்கள்.

## கடைசியில் சமாதிக் குழியே

**தொழுகை தனைவிட்டும் முழுக்கைவிட்டும்**
**துன்பமிகவுள்ள இன்பங்கொண்டு**
**கழுதையினம் போலே ஆணும் பெண்ணும்**
**ஹயாக்கேடாகவே வாழ்வதெல்லாம்**
**முழுதுமுயிர்கள் போய் மௌத்தானக்கால்**
**மோசமினிப் பிணம் நாறியபின்**
**அழுதுகுரல் கேட்கக் கபுறுதனில்**
**அடங்குந்தன்மையை அறிந்திலையோ (7)**

கழுதையினங்கள் போல் தொழுகையில்லாமலும், முழுக்குக் குளிப்புகளைப் பேணித் துப்பரவாகாமலும், துன்பம் நிறைந்த அற்ப சுக இன்பத்தில் திளைத்து, சன்மார்க்கக் காரியங்களில் சிறிதும், அக்கரையின்றி

வாழ்ந்து வரக்கூடிய மானங்கெட்ட ஆண்களும், பெண்களும், அவர்கள் வாழ்ந்த சுக வாழ்வெல்லாம் முற்றுப் பெற்று அவர்களது உயிர் நீங்கி மரணமடைந்த வேளையில் கேவலமான துர்நாற்றபிணமாகி சமாதிக் குழியில் புதைக்கப் படுவதை அறியமாட்டீர்களா?

## மரணம் வரைத் தொழுகை

நானூற்றுச் சின்னந்தலங்களிலே
நலமாந் தொழுகையின் கருமமாக
கோனேற்ற மானோன் குர்ஆன் தனில்
குணமாய் வணங்கத்தான் வேண்டுமென்றான்
நீநூற்று வயதிருந்த போதும்
நிலத்தில் வீழுமட்டுந் தொழவே வேண்டும்
நூநூற்றது போல விளங்கவேண்டும்
நோன்பும் தொழுகையும் ஆண் பெண்ணுக்கே (8)

மன்னாதி மன்னனாகிய அல்லாஹ், திருக்குர்ஆனில் நானூற்றுச் சொச்சந் தலங்களில், நன்மைகள் நிறைந்த தொழுகையைப் பற்றிக் குறிப்பிட்டு, குணமாகத் தன்னை வணங்க வேண்டுமென்று கட்டளையிட்டுள்ளான். எனவே, நீ நூற்றாண்டுகளாக வாழ்ந்து, தொண்டு கிழவனாயிருந்தால் கூட, பிரேதமாகி மண்ணில் மறைகின்றவரைக்கும் தொழுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறாய், சன்மார்க்க அறிவுரைகளைக் கற்று பிறருக்கும் போதித்து விளங்க வேண்டும். தொழுகையும் நோன்பும், ஆண்,பெண் இருபாலர் மீதும் கடமையாகும்.

## பிழை யாவும் தீரும்

மருவியொவச் செய்தே அகத்தாலஞ்சி
மனது கோணாமற் றொழுதோருக்கு
தெருவுதனில் ஓராறோடுமாகில்
தினமைந்து முறைக்குளித்தாலதில்
செருமியிருக்கின்ற வூற்றைப் போம்போல்
சேர்ந்த பிழையெல்லாந் தீருமென்று
குருவாம் நபி சொன்னாரென்றே நல்ல
குணமுள்ள ஜாபிரெடுத்துரைத்தார். (9)

குருபிரான் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சொன்னாதாக ஜாபிர் (ரலி) கூறியுள்ளார்கள் . "வீட்டிற்க்கு பக்கமாகத் தெருவில் ஓடும் ஆற்றில் தினசரியும் ஐந்துமுறை குளித்தால் உடலில் செருமியுள்ள அழுக்கு அடியோடு நீங்குவது போல , முறையே ஒலுச் செய்து , அந்தரங்க பக்தியுடன் தொழுதோர் உடைய பிழையெல்லாம் நீங்கிவிடும்".



## இமாமைப் பேணல்

வரிசை இமாமுக்கு முன்தலையை
வரகாய் உயர்த்துவோர் தலைபோல்
பெரிதாயெழுப்புவா னெனவுமின்னும்
திரும்பி பார்க்குதல் தொழுகை தனில்
ஷைத்தான் இபுலீஸூ றாஞ்சலென
கரும்பு போலுரை செப்பு மெங்கள்
கண்ணின் மணியானநயினார் சொன்னார் (10)

தொழுகையின் இமாமுக்கு முற்பட தலையை ருகூவு ஸுஜூதை விட்டு உயர்த்துவோர் இவர்களது இத்தகைய அலட்சிய போக்கின் காரணமாக, ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து தத்தளிக்கும் கியாமத்து நாளையிலே அவர்களுடைய தலையை நாயின் தலைபோல் ஆக்கி அல்லாஹ் எழுப்புவான் எனவும், தொழுகையில் அங்குமிங்கும் திரும்பி பார்க்குதல் ஷைத்தான் இபுலீஸுடைய உரசுதல் எனவும் கரும்பு போல இனிமையான உரை பேசும் எங்கள் கண்ணின் மணியான நயினார் நபி நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

## அக்கிரமிகளை அடக்கியவனை வணங்குக!

ஷத்தாதுடன் ஆதை தமூது தன்னை
ஷர்ராம் நம்றூது பிர்அவுன் தன்னை
மத்தாயெனும் வெகுநீளமுள்ள
மாரிதாமூஜூ வம்பன் தன்னை
முத்தாம் நபி வள்ளல் தம்முடனே
முண்டி எதிர்ச்செய்த அபூஜஹீலை
வித்தாரமாக வொடுக்கு வித்த
வேந்தன் தனை நித்தம் வணங்குவீரே. (11)

செல்வத்திலும், சுகத்திலும், தீங்கிலும், வம்பிலும் அழுந்தி, அக்கிரமங்கள் புரிந்த முன்னாள் மூதேவிகளான ஷத்தாது, ஆது, தமூது, நம்றூது, பிர்அவுன், ஊஜூ முதலியவர்களும், நபி வள்ளல் (ஸல்) அவர்களோடு முண்டி எதிர்த்த சண்டாளன் அபூஜஹ்லும் கடைசியில் எக்கதியடைந்தார்கள்?

என்பதை எண்ணிப் பாருங்கள் அவர்களது கொட்டங்களனைத்தையும் அடியுடன் அடக்கியொடுக்கியொழித்த சர்வ சக்தியுள்ள வேந்தன் அல்லாஹ்வை நீங்கள் நித்தமும் அஞ்சி பணிந்து தொழுது வரவேண்டும்.

# பெரும் பாக்கியம்

**தேனாறு பாலாறு நீராறுடன்**
**தெளிந்த மதுவாறு மோடுகின்ற**
**தீனோர் புகும் சொர்க்க நிஃமத்துவும்**
**தீங்கொன் றணுகாதான் தரிசனையும்**
**தானோரன் தனையஞ்சி வணக்கத்துடன்**
**தக்க நோன்புகள் ஸதகாக்களும்**
**தானே செய்வோர்களும் தங்களுக்கு**
**தக்கோன் கொடுப்பா னென்றாரிரசூல் (12)**

தேனாறும், பாலாறும் ,நீராறும், மதுவாறும், பேரின்பமயமாய் ஒடுகின்ற, சன்மார்க்க நெறிபிரகாரம் ஒழுகி நடந்த உத்தமர்கள் புகுதுகின்ற உயர் சொர்க்கத்தின் அருட்கொடைகளும் தீங்கு எதுவும் அணுகாத இறைவனின் தரிசனை பாக்கியமும் அந்த இறைவனை அஞ்சி பயந்து வணங்கி, நோன்பு நோற்று ஜகாத், தான தருமங்கள் கொடுத்து ஈமான், இஸ்லாம் பேணி நடக்கும் நல்லடியார்களுக்கு அல்லாஹ் கொடுத்தருள் புரிவான் என்பதாக நாயகம் ரஸுலுல்லாஹி (ஸல்) உரைத்துள்ளார்கள்.

**தொழுது ஈமானின்படி நடந்து**
**தொல்லை துன்யாவிட் டிறந்தபின்பு**
**பழுதா மரவந்தேள் பிடித்திடாமல்**
**பார அர்ஷின் கீழ் நிற்போர்களை**
**பொழுது நிலவையும் பழிக்குகின்ற**
**பூவை யெனும்ஹூருல் ஈன்கள்தாவும்**
**வனைந் தங்கெதிராக சங்கையுடன்**
**வரிசைப் பதிசொர்க்கஞ் சேர்வார்களே. (13)**

ஐங்காலமும் தொழுது ஈமான், இஸ்லாம் பேணி ஒழுகி நடந்தவர்கள் அற்ப உலகை விட்டு இறந்த பின்பு சமாதிக்குழியில் அவர்களை பொல்லாத பாம்பு, தேள், முதலிய விஷ ஜந்துகளின் வேதனை பாதிக்காமல் அல்லாஹ் பாதுகாத்து மகத்தான தனது அர்ஷின்கீழ் அவர்களை நிழலில் ஆக்கி வைப்பான். மேலும் அவர்களை சூரியப்பிரகாசத்தையும் பழிக்கும் அழகிய தோற்றமுடைய சொர்க்க ரம்பைகளான ஹூருல் ஈன்பெண்கள் சங்கையுடன் வரவேற்று தங்களுடன் சேர்த்து சொர்க்கப்பதிக்கு அழைத்துச் செல்வார்கள்.



# நீங்காக் கடமை

**கலிமாச் சொல்வது ஹயாத்திலொன்று**
**கனத்த ஸகாத்துதான் சீமான்கள்மேல்**
**மலிவான நோம்பு வருஷந்தோறும்**
**மிக்க ஹஜ்ஜுதான் வெகுசீமான் மேல்**
**சலியாத் தொழுகைதான் காலமெல்லாம்**
**தனக்கு ரிஸ்கு மூச்சுள்ள மட்டும்**
**மெலிவாயிருந்தாலுந் தொழுமெனவே**
**மேதை முஹம்மது நபியோதினார் (14)**

ஆயுளிலொரு தடவையேனும் கலிமாச் சொல்ல வேண்டும், கண்ணியமிக்க ஏழைவரி (ஜகாத்) சீமான்கள் மீது கடமையாகும். நன்மை மிக்க நோன்பு வருஷந்தோறும் ரமலான் மாதம் கடமையாகும். மக்கா யாத்திரை (ஹஜ்ஜு) சக்தியும், இயல்பும் பெற்ற செல்வந்தர்கள் மேல் கடமையாகும். உயிருள்ள காலம் முழுக்க வியாதியாயிருந்தாலும் கூட, ஒவ்வொருவர் மீதும் தொழுகை கடமையாகும் என்று பேரறிஞர் முஹம்மது (ஸல்) அவர்கள் உரைத்துள்ளார்கள்.

# தொழுகை விட்டோர் நேசம் வேண்டாம்

**வேத குர்ஆனில் தவ்ராத்தினில்**
**வெளிச்சமுள இன்ஜீல் ஜபூரில்**
**நாதன் தொழுகைவிட்டோர்கள் பொல்லா**
**நாற்றமுள காபிரென வந்ததே**
**காதல் மணம்வீசும் நபிஉம்மத்தில்**
**கனமாம் தொழுகையைப் பழுதாக்கின**
**மாதை மனதாசை மனதுள்வைத்த**
**மாந்தர் நையாவைச் சந்திப்பாரே (15)**

புனித வேதங்களாம் குர்ஆனிலும். தவ்ராத்திலும், இன்ஜீலிலும், ஜபூரிலும் நாயனாகிய அல்லாஹ்வைத் தொழாமல் மறுத்து நிராகரித் திருப்பவர்கள் துர்நாற்றமுடைய காபிர்களாவர். என வந்துள்ளதே. எனவே தொழுகையை விட்டிழந்திருக்கலாமா? மேலும் காத தூரம் கஸ்தூரி மணம் கமழும் நபிகள் நாயகம் (ஸல்) உடைய உம்மத்தில் சங்கையான தொழுகையை நிராகரித்துப் பழுதாக்கி விட்டிருக்கும் பெண்ணை மனத்தால் நேசித்துத் தொழும்படி ஏவாமல் அவர்களை போற்றி உவப்பு வைக்கும்மனிதர் கூட நைய எனும் கேவலமான நரக ஓடையைச் சந்திப்பார்கள் என்பதையும் அறிவீர்களாக!

## நாய் பன்றிமேல் ஆனால்...

**தொழுகை தனை விட்டோர் கழுதையிலும்**
**சுணங்கனாயிலும் பன்றியிலும்**
**பழுது குறையான நாற்காலிலும்**
**பார நரகத்துக் காபிரிலும்**
**முழுதுமே கெட்டோர் இவரெனவே**
**முன்னாள் முஹம்மது ஹதீதின்படி**
**அழுது தொழுதுதான் அமல்கள் செய்யும்**
**அறிவாளரெல்லாம் எடுத்துரைத்தார் (16)**

"கழுதை, நாய், பன்றி, முதலிய கேவலமான நாற்கால் மிருகங்களிலும் மிக கேடு கெட்டோன், பார நரகத்துக்காபிரை விடப் பாழுங் கேடுகெட்டோன் தொழுகையை விட்டவன்தான்" என்று முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக, அஞ்சி, அழுது, தொழுது நற்கிரியைகள் புரிந்த அறிவாளர்களெல்லாம் எடுத்துரைத்துள்ளார்கள்.

## எல்லாரது முனிவையும் ஏற்பவர்

**முந்தவுள நாயன் முனிவினாலும்**
**முழுதும் வானத்தோர் முனிவினாலும்**
**அந்தர லோகத்தோர் முனிவினாலும்**
**அதன்பின் புவியுள்ளோர் முனிவினாலும்**
**பிந்தப்புவியின் கீழ் மறைந்திருக்கும்**
**பெரியப்படைப்புகள் முனிவினாலும்**
**அந்தமுள கடல்மலை மரங்கள்**
**அதபாய் வணங்காரைபதுவாச் செய்யும் (17)**

இறைவனை ஒழுக்கமுடன் வணங்கித் தொழாதவர்களுக்கு அல்லாஹ்வின முனிவும், வானவர்களது முனிவும், அந்தரலோகத்தவர்களது முனிவும், பூலோகத்தவர்களது முனிவும், பூமிக்கு கீழ் மறைந்துள்ள படைப்புகளின முனிவும், கடல், மலை, மரங்கள் ஆகிய சர்வ வஸ்துக்களின் சாபமுனிவும் ஏற்படுகிறது.

## மிஸ்வாக்கு செய்வதன் பயன்

**பல்லு விளக்கித்தான் தொழுகிறது**
**பழுப்பாய்த் தொழுவதி லேழுபத்துச்**



**சொல்லுந் தொழுகையிலேற்றமாகும்**
**சொந்த மிஸ்வாக்கில் இரு பன்னீர்**
**நல்ல காரியமுண்டுமென்று**
**நல்லோர் சொன்னவைக் கேட்டறிந்தே**
**அல்லும் பகலு மெவ்வக்திலேயும்**
**அழகாம் மிஸ்வாக்குச் செய்வீர்களே (18)**

"பற்களை சுத்தம் செய்யாமல் தொழுவதைவிட பற்களைச் சுத்தி செய்து தொழுது வரும் தொழுகை எழுபது பங்கு விசேசமாகும். மிஸ்வாக்குச் செய்வதில் (இருபன்னிரண்டு) இருபத்தி நான்கு வகை நன்மைகளுண்டு என்று சான்றோர்கள் சொன்னவற்றைக் கேட்டறிந்து அதன்படி இரவு பகல் எல்லா வேளைகளிலும் அழகாக தந்த சுத்தி (மிஸ்வாக்) செய்து வருவீர்களாக!

## ஜும்ஆத் தொழுகை

**நல்ல வெள்ளியில் தொழுகை விட்டோர்**
**நாடும் நபிநாத ரேவற்படி**
**வெல்லும்வீர்துக ளெல்லாத்துக்கும்**
**வேறுபட்டவோர், பாவியாகும்**
**நல்லாருடன் கூட ஆசை வைத்து**
**நாடி தினந்தோறும் ஜும்ஆதன்னை**
**தொல்லையணுகாமல் பேணுதலாய்**
**தொடர்ந்து தொழுவீரென்றாரீரஸூல் (19)**

நன்மைகள் நிறைந்த வெள்ளிக்கிழமை ஜும் ஆத் தொழுகையை (தவிர்க்க முடியாத தடங்கல் எதுவுமில்லாதிருக்க) விட்டிருப்பவர்கள் நபிகள் நாயகமுடைய ஏவற்படியுள்ள அனுஷ்டானம் எல்லாவற்றுக்கும் மாறுபட்ட பாவிகளானோர்கள். நல்ல சான்றோர்களுடன் ஒன்றுகூடி உவந்து தொல்லை ஏதுமின்றி பேணுதலாய், ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து நடத்தி வர வேண்டும் என்று திருத்தூதர் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி யுள்ளார்கள்.

## வெள்ளியில் வேட்டை வேண்டாம்

**வெள்ளிக் கிழமை நாள் வேட்டை போகல்**
**விலக்கான செயலாமெனவே**
**பள்ளிக்கே வந்து கூடினாலும்**
**பாதி நன்மையும் கிடையாதென்றார்**
**தள்ளியதை விட்டு முஸ்லிமானோர்**
**தகுமா நபிஸுன்னத்தை விடாமல்**
**வள்ளிசாகவே முழுகிக் கொண்டு**
**உவந்து குத்பாவைத் தொழுவீர்களே (20)**

"வெள்ளிக் கிழமையன்று வேட்டைக்காக போகுதல் விலக்கான செயல். எனவே, அவ்விலக்கான செயலைப் புரிந்து பின்பு பள்ளிவாசலுக்கு வந்து கூடினாலும்பாதி நன்மைகூட கிடையாது" என்று நபிகள் (ஸல்) கூறியுள்ளார்கள். ஆகவே, முஸ்லிம்களாகிய நீங்கள் அம்மாதிரி விலக்கான செயல்களைத் தள்ளிவிட்டு, நபி நாயகம் (ஸல்) உடைய செயல்களை (ஸுன்னத்துக்களை) விடாமல் கையாண்டு, வெள்ளிக்கிழமையன்று நேர்த்தியாக குளித்து, சுத்தமாகி மனமுவந்து குத்பா ஓதக் கேட்டு ஜும்ஆவைத் தொழுவீர்களாக!

## குத்பாவை விட்டோர்கள்

**குத்பா தன்னைத்தினம்விட்டபேர்கள்**
**கொடிய முனாபிக்குக் கேடராகும்**
**சுத்தமாம் ஹஜ்ஜூப் போலதான**
**துய்ய ஜூம்அத்துத் தொழுகை தன்னை**
**நித்தம் தான் வந்து தொழாமல் விட்டோன்**
**நீதிநபியுட ஷபாஅத்துக்குச்**
**சத்தனா கவேயாகானென்று**
**சாற்றினார் நல்ல வுலமாக்களே. (21)**

வெள்ளிக்கிழமை குத்பா தொழுகையை ஏதேனும் தக்க காரணமின்றி அலட்சியமாக விட்டுக்கொண்டிருக்கும் வழக்கம் உடையவர்கள் கபடத் தனமுடைய கெட்ட முனாபிக்குகளாகும். ஏழை எளியவர்களுக்குப் புனித ஹஜ்ஜைப் போன்று அமைந்திருக்கும் புனித ஜும்ஆத் தொழுகையை தகுந்த காரணமின்றி வேண்டமென்றே விட்டிருப்போர்கள் நீதியும், நேர்மையும் உடைய நபிகள் நாயகம் (ஸல) அவர்களுடைய ஷபாஅத்துக்கு அருகதை அற்றவர்களாகி விடுவார்கள் என்று மேன்மை மிக்க உலமாக்கள் கூறியுள்ளார்கள்.

## நபி மாளிகையை இடிப்பவர்கள்

**பள்ளிதனில் வணங்காமலே**
**பலகாலஞ் சிலவிடந்தொழுதோர்**
**ஒள்ளிதா நபி மாளிகையை**
**ஒழியவிடிப்பித்தப் பழிகாரராய்த்**
**துள்ளியவர் தொழும் வணக்கமெல்லாம்**
**துலக்கங் கலங்கலாய்ப் பழுதாமென்று**
**அள்ளிகைர் கொடுத் தமல்கள் செய்யும்**
**அறிவாளரெல்லாம் எடுத்துரைத்தார் (22)**

"பல காலங்களாக பள்ளிக்கு வந்து வணங்காமல் வேற்றிடங்களில் தொகுதோர், மேன்மைமிக்க நபி மாளிகையை இடித்து ஒழித்த



பழிகாரர்களாவதோடு அன்னவர் செய்யும் வணக்கமெல்லாம் பிரகாசமற்று கலக்கமுடையதாகி, பழுதடைந்து போய்விடும்" என்று திரவியங்களை அள்ளி (கைராத்து) தரும சகாயங்களைச் செய்தவர்களும், மற்றும் பல நற்கருமங்களைச் செய்தவர்களுமான சன்மார்க்க அறிவாளர்கள் கூறியுள்ளார்கள்.

## வெறுஞ்சோறும் வேலியில்லா பயிரும்

**பறுலாந் தொழுகைகள் தனைத் தொழுது**
**படைத்தோன் நபிஸூன்னத் ததனைவிட்டோர்**
**வெறுஞ் சோத்தினைத் தின்று கறியன்றியே**
**விக்கி விழுங்காமற் சாதற் போலும்**
**திறமாம் பயிருகள் தன்னைப் போட்டு**
**திருந்த வடைப்புகள் அடையாமலே**
**விருக சாதியை மேயவிட்டு**
**வீணே போனவர் தானாமென்றார் (23)**

"கடமையான ஐங்காலத் தொழுகையை மட்டும் தொழுது, நாயகம் (ஸல்) மேல்மிச்சமாகத் தொழுத நஃப்லு, ஸுன்னத்துக்களை அலட்சியமாக விட்டோரின் நிலைமைகள் கூட்டுக்கறி, ரசம் ஏதுமின்றி வெறுஞ்சோற்றை மட்டும் தின்று விழுங்க முடியாமல் விக்கி மடிவது போலவும், உயர்ந்த ஜாதி பயிர்களை விதைத்து அவற்றைச் சுற்றி வேலி, அடைப்புகள் போட்டுப் பாதுகாக்காமல் மிருகங்களை அவற்றில் மேய விட்டு நாசமாக்கியது போலவும் தான் ஆகும்", என்று பெரியோர்களான ஆலிம்கள் கூறியுள்ளார்கள்.

## அஸ்றுத் தொழுகை

**மறவாமல் அஸ்றுத் தொழுகை தன்னை**
**மற்ற வணக்கமா நிஸ்காரத்தை**
**குறைவு காணாமல் நிறப்பமாக**
**குறித்த இமாமுடன் தொழுவீரென்றும்**
**சிறப்பாம் அஸ்றினை விட்டபேர்கள்**
**செய்த தவமெல்லாம் அழியுமென்றும்**
**பிறப்பு மிறப்பி ல்லாவுடைய நபி**
**பேசினாரென்றார் பெரியோ ரெல்லாம்.**

"சிறப்புமிக்க அஸ்று தொழுகையை நிறைவேற்றாமல் விட்டவர்கள், வேறு எத்தனை புண்ணிய தவஞ் செய்தாலும் அவையழிந்துவிடும். எனவே, நன்மைகள் மிக்க அஸ்று தொழுகையையும் மற்ற வேளைத் தொழுகைகளையும் மறவாமல், ஏற்பட்ட இமாமுடன் கூடிச் சேர்ந்து சரிவரத்

தொழுது வருவீர்களாக"என்று பிறப்பு. ,இறப்பு இல்லாத நாயனுடைய திருத்தூதர் நபி நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக சன்மார்க்க மேதைகளான பெரியோர்கள் எல்லோரும் கூறியுள்ளார்கள்.

## இஷா,ஸுப்ஹு தொழுகை

**கடுமை முனாபிகாம் பேர்கள் மேலே**
**கனத்த தவமாகும் இஷாபஜிறு**
**படுத்து பராக்காக விட்டிடாமல்**
**பதறி விழித்துதான் தொழுவீரென்றும்**
**குடும்ப மிழந்து தான் முதலிழந்து**
**குடிகேடணுகியே இருப்போர்கள் போல்**
**நடுவாம் அஸர்விட்டோராவா ரென்றும்**
**நவ்வியுடன் பேசிவென்றோர் சொன்னார் (25)**

"வீடு, வாசல், சொத்து, மனைவி, மக்கள் யாவற்றையும் இழந்து குடிகெட்டவர்கள் எவ்வாறு கை சேதம் அடைவார்களோ அதேவிதமாக, அஸறு தொழுகையை விட்டு இழந்தவர்களுக்கும் கைசேதம் அடைவார்கள். புண்ணியங்கள் பொதிந்த இஷாத் தொழுகையும், பஜ்றுத் தொழுகையும் கடின நயவஞ்சக முனாபிகுகளுக்கு தாங்கமுடியாத பெருஞ்சுமையாக இருக்கும். உண்மை மு.்.மின்களோ உற்சாகமாகவும், இன்பமாகவும் அவற்றை ஏற்று நடத்துவர். எனவே, சோம்பியோ பராக்காகவோ நீங்கள் படுத்து உறங்கி விடாமல், விழித்திருந்து மேன்மையான அவ்விருவேளைத் தொழுகைகளையும் நிறைவேற்றி வருவீர்களாக" என்று மானோடு வசனித்த மாமகிபர் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

## ஸுன்னத்துக்களின் மகத்துவம்

**பஜ்ரு தொழுகை முன்னொரு ஸுன்னத்து**
**பதியிலுள்ள வாழ்க்கை யடங்கலுக்கும்**
**குஷியாய் கைராகும் லுஹருக்குமுன்**
**குணமாயதின் பின்னுமிரண்டு ஸலாம்**
**குசியாய்த் தொழுதோர்க்கு நரகம் ஹராம்**
**நுவலுமஸருக்கு முன்னிரு ஸலாம்**
**பிசகில்லாமலே தொழுதோருக்குப்**
**பெரியோன் ரஹ்மத்தைச் சொரிவானென்றார் (26)**

"பஜ்ருத் தொழுகைக்கு முன்பு ஸுன்னத்தாக ஒரு ஸலாம் தொழுவதனால் உலக வாழ்வில் மகிழ்ச்சியும் நன்மையும் பொங்கும். மத்தியான லுஹரு தொழுகைக்கு முன்பும், பின்பும் இரண்டு ஸலாம் ஸுன்னத்து மகிழ்வுடன்



தொழுபவருக்கு நரகம் விலக்காகி விடும். போற்றிப் புகழப்படும் அஸறுக்கு முன்பாக இரண்டு ஸலாம் பிசகின்றி தொழுபவர்மீது அல்லாஹ் தனது அருளைச் சொரிவான்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**வண்மை மக்ரிபுத் தொழுகைக்குப்பின்**
**வாகாயொரு ஸலாந் தொழுதிடவும்**
**உண்மையுள இஷாத் தொழுத பின்னர்**
**உறுதியுடனொரு ஸலாந்தொழவும்**
**பண்மையுற்ற ஞான நபியிரஸூல்**
**பாரில் மனிதருக்குரைத்தாரென**
**எண்மையுடனிப்னு உமறு சொன்னார்**
**என்றே இயம்பினார் இமாம்புகாரி (27)**

பண்மை மிக்க மெய்ஞ்ஞான நபி நாயகம் (ஸல்) அவர்கள் மாந்தருக்கு உரைத்ததாக, அத்தாட்சியுடன் இப்னு உமறு (ரலி) கூறுவதாக புகாரி இமாம் (ரலி) எடுத்துரைத்துள்ளார்கள், "வளமிக்க மக்ரிபு தொழுத பிறகு அழகாய் ஒரு சலாம் ஸுன்னத்துத் தொழுகையும் இயல்புமிக்க இஷாத் தொழுத பின் உறுதியுடன் ஒரு ஸலாம் ஸுன்னத்துத் தொழுகையும் தொழுது வருவீர்களாக!"

## அவ்வாபீன், வித்ரு

**பத்தியா யாறு ரக் ஆத்துதான்**
**பாரமக்றிபு பின்றொழுதால்**
**சுத்தியாய் வணங்குதல் போலாமென்றும்**
**வித்ரு தொழாத பேரென்னும்மத்தில்**
**விருப்பமுள்ள னல்ல வென்று நபி**
**வெற்றி பெறச் சொன்னாரெனக் கிதாபில்**
**விளம்பினார் அபூதாவூ தென்பார் (28)**

வெற்றியுற நபிநாயகம் (ஸல்) அவர்கள் சொன்னதாக இமாம் அபூதாவூது (ரலி) தனது ஹதீதுகிதாபில் எடுத்துரைத்துள்ளார்கள். "மேன்மையான மக்றிபு தொழுத பின்பு பக்தியுடன் ஆறு ரக்அத்து ஸுன்னத்து தொழுது வருதல், சுத்தியுடன் பன்னிரண்டு ஆண்டுகள் வணங்கியதற்குச் சமமாகும். (இத் தொழுகைக்கு ஸலாத்துல் அவ்வாபீன் எனச் சொல்லப்படும்) வித்ருத் தொழுகையை தொழாதவர்கள் என் உம்மத்தில் என் விருப்பைப் பெறாதவர்கள்" (இஷாவுக்குப் பிறகு கடைசியாகத் தொழப்படுவது வித்ருத் தொழுகை)

# மிக மிகக் கேடுகெட்டவர்கள்

**தொழுகை யில்லாத பன்றியர்க்குச்**
**சோறு கறிமணமாய்க் கொடுத்தோர்**
**அழகான வன்னை யவளுடனே**
**அணைந் தவனைப்போலே ஆவாரென்றும்**
**பழுதாம் நாய்தின்னுஞ் சட்டிதனில்**
**பாவி யவன் தின்ன நாயதுதான்**
**தழுவி யொஜீபனந் தின்னாமலே**
**தள்ளிவிட்டதைக் கேட்டிலையோ (29)**

தொழ முடியாது என்று மறுத்து தொழாதிருக்கும் பன்றியிலும் கேவலமானவர்களுக்கு அவர்களது அந்தப் போக்குத் தெரிந்தும், ஏவல் விலக்கல் செய்யாமல் வேளா வேளைக்கு மணமான சோறு கறிகளை உண்ணக் கொடுத்து அல்லாஹ்வுக்கு மாறு செய்வதில் அவர்களுக்கு ஊட்டம் கொடுப்பவர்கள் பெற்ற தாயுடன் அணைத்தவரைப் போலாவார்கள் என்ற செய்தியை நீங்கள் கேள்விப்பட்டதில்லையோ? நாய் ஒன்று வழக்கமாகத் தான் தின்னும் சட்டியில் தொழுகையை விட்ட (தாரிக்குஸ்ஸலாத்) பாவியொருவன் ஒருநாள் உணவு உண்க, அந்த சட்டியில் இனி உண்ணப் போவதில்லை என்று அந்த நாயும் கூட வெறுத்து அச்சட்டியைத் தள்ளிவிட்டு நிராகரித்த செய்தியை கேள்விபட்டதில்லையோ?

**தொழுகை யிழந்தோர்க ளென்னைப்போல**
**தோஷத்தால் பாவி யாவாரெனப்**
**பழுதாம் இபுலீஸ்ʷ சொன்னதையும்**
**பாரக் குளந்தனில் தொழுகையில்லான்**
**கழுதை யினம்போலே குடித்தளவில்**
**கனத் தவமுள்ள ஓர்ஷைகுதான்**
**அழுது மனம்வாடி அக்குளத்தை**
**அகன்ற செய்தியை அறிந்திலையோ (30)**

கேடுகெட்ட இபுலீஸ்ʷ, "தொழுகையை விட்டிழந்து மறந்திருப்பவர்கள் என்னைப் போன்ற தோஷமுடைய பாவியாவார்கள்" என்று சொன்ன செய்தியும், வணக்க சீலரான பேணுதலுடைய ஒரு ஷெய்குப் பெரியார் வழக்கமாக நீர் அருந்தும் குளத்தில், தொழுகையை விட்டிழந்து கழுதை போல் திரியும் தாரிக்குஸ்ஸலாத் ஆன ஒருவர் அக்குளத்தில் இறங்கி தண்ணீர் அருந்த இனிமேல் அக்குளம் தனக்குத் தேவையில்லை என்று அப்பெரியார் அழுது மனம்வாடி அக்குளத்தை விட்டு அகன்று போன செய்தியும் நீங்கள் அறிந்ததில்லையோ?



# கள்ள ஞானிகள்

**ஆகாத சில பாஸிகானோர்**
**அறிவினால் ஞானியெனப் பேரிட்டு**
**வாகான மார்க்கந்தன்னை விட்டு**
**மனிதர் தமையுங் கேடாக்கினோர்கள்**
**சாகான்லஃனத்தைப் பொதிந்துகொண்ட**
**சங்கையணுகாத இபுலீஸ்ʷதன்**
**மோக முளப் பயலாங் குஃப்பாரை**
**முடுகிடா வண்ணம் நடப்பீர்களே (31)**

அறிவில் முதிர்ந்த ஞானி எனப் போலி பெயர் கூறிக் கொண்டு சத்திய மார்க்க ஷரீஅத்திற்கு விரோதமாக நடந்து மற்றவர்களையும் வழிகேட்டிலாக்கும் சில தீயவர்கள் மரணமில்லா மகிபன் அல்லாஹ்வின் சாபத்தைப் பொதிந்து கொண்ட துன்மார்க்கன் இபுலீஸின் அன்பிற்கு பாத்தியமான கா∴பிர்கள் ஆகியோர்களுடைய போக்குகளை அண்டி நெருங்காமல், இஸ்லாமிய ஷரீஅத்து அடிப்படையிலுள்ள நன்னெறியில் நீங்கள் நடப்பீர்களாக!

**கருநாடகந்தனிற் சிலர் பொல்லாத**
**கள்ள ஹறாமிகளிருந்து கொண்டுக்**
**கருதித் தொழுவோரை கலைத்திடுவார்**
**காஃபிர்தனில் கெட்ட காஃபிர்களாய்**
**மருவு மனிதரெல்லாரும் சரி**
**மாந்தருயர்த்தி தாழ்வில்லையென்றும்**
**குருவி னுபதேசங் கொள்ளாமலே**
**குடி கேடனுகிய ஞானி சொல்வார் (32)**

"மனிதர்கள் யாவரும் ஆண்டவன் சமுகத்தில் சம அந்தஸ்துடையவர்கள், தன்னை வணங்காதவர்கள் என்று அவர்களில் ஒரு சாராரைத் தாழ்வாகவும், தொழுதவர்கள் என்று மற்றவர்கள் உயர்த்தியாகவும் கருதமாட்டான். எனவே அல்லாஹ்வைத் தொழாதிருப்பதில் தோஷமில்லை" என்று கூறிக் கொண்டு கருநாடகத்தைச் சேர்ந்த சில கள்ளக் கசட்டு ஞானிகள், குருநாதர் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளைக் கடைபிடிக்காமல், கா∴பிர்களிலும் கேடுகெட்ட கா∴பிர்களாய் தொழுதுக் கொண்டிருப்பவர்களையும் தொழாமல் கெடுத்து விடுவார்கள்.

**அந்த ஞானிகளிடத்திற் சொல்வாய்**
**அழகா மகளை நீ காஃபிருக்கு**
**சொந்தமாய் கலியாணஞ் செய்து**
**சுகங்கொள்ளச் சேர்த்து வைப்பாயென்றும்**

அந்தமிலாக் காலியினங்கள் போல
ஆன உடையின்றி உரியரனாக
எந்த விதத் தாவுமிருந்துக் கொள்ள
இணங்கூமுட னாகுமோ வெனவே (33)

"நல்லவன், கெட்டவன் என்ற பேதம் தேவையில்லை. எனச் சாற்றும் தாங்கள், உங்களருமை மகளை ஒரு காபிருக்குக் கல்யாணம் செய்து வைக்கலாம் தானே. மிருகத்தை விட மனிதன் உயர்த்தி என்று கூறிக் கொண்டு ஆடைகளை ஏன் அவன் அணிய வேண்டும்? மிருகங்களோடு சம அந்தஸ்தாகி, ஆடு, மாடுகள் போல் நிர்வாணமாக ஆடையின்றி திரியலாம் தானே?" என்று அந்த அஞ்ஞானிகளிடம் கேட்டுப் பாருங்கள்.

இன்னமுஞ் சொல்வா யவனுடனே
எல்லாஞ்சரி என்று சொன்னபோது
உன்னுடைய பெண்ணை மணஞ்செய்யும்போல்
உவப்பா மகளோடு தாய் தன்னையும்
நன்னயமாக மணஞ்செய்வது
நாயே யுனக்காகுமோ வெனவே
வின்னமிகவா கிவழிகெட்டோரை
விரைந்து சினந்து நீயகற்றுவாயே (34)

"தார தம்மியமெல்லாம் எதிலும் தேவையில்லை எல்லாஞ்சரியே எனச் சொல்லும் நீ, உனது மனைவியை மணந்திருப்பது போல உன்னைப் பெற்ற தாயையும், உனக்குப் பிறந்த மகளையும் கூடி, நீ நன்னயமாக மணந்துக் கொண்டாலும் அதுகூட தோஷமில்லை என்று கூறத் துணிவாயா? சீ நாயே!" என வேகமுடன் சினந்து பங்க மிக்க அவ்வழி கெட்டோனை ஒதுக்கித் தள்ளுங்கள்.

## உள்ளாற்றொழும் தொழுகை

உள்ளாற் றொழுகிறே னென்றுரைக்கும்
ஊனனுடன்சொல்வாயும் மங்கையை
உள்ளாற் சேர்ந்துக் கொண்டேனெனவே
உன்னினாற் சுகந்தீர் ந்திடுமோ
உள்ளாற் சேர்க்கையை நினைத்ததனால்
உவப்பரம் மகவுண்டாய்ப் பெறுவார்களோ
உள்ளாற் சோறுண்டால் பசிதீருமோ
உள்ளால் நெய்தாவும் பீடவையாமோ (35)



"வெளிரங்கமாக நாங்கள் தொழாமலிருந்தாலும் அந்தரங்கமாக மனதுக்குள்ளால் தொழுகின்றோம்" என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற போசனப்பிரியனான அந்த மூடனை நோக்கி, "உனது மனைவியுடன் சேர்க்கை செய்வதாக மனத்தால் நினைத்துக் கொண்டாயேயானால் போக சுகம் நிறைவேறிவிடுமா? வாயால் ஆகாரம் அருந்தாமல், மனதால் ஆகாரம் அருந்துவதாக நினைப்பதானால் பசி அடங்குமா?" நேசவின்றி மனத்தால் நினைக்கும் நினைப்பாலேயே புடவை கிடைத்திடுமா ?" என்று கேளுங்கள்.

துனியாக்கருமத்தி லிந்தப்படி
துணிவாயிருந்தால் தீன் கருமத்திலும்
இனிதாய் துணிவாக வுறுப்பால் அமல்
ஏற்றமாய் வெளிப்பட செய்யார்க்கு
கனியாங் காமத்தைக் கண்டாலுமாம்
சனியாமவர்கள் நேர்வழியை விட்டு
ஸ(Q)கரில் விழுவார்கள் முனிவாகவே. (36)

உலக சம்பந்தமான காரியாதிகளில் உள்ரங்கத்தால் எண்ணி வாளாவிருக்காமல் வெளிரங்கத்தில் உறுப்புகளால் செயல்கள் எவ்வாறு துணிவுடன் செய்கிறார்களோ அதுபோல் மார்க்க சம்பந்தமான கருமங்களிலும் துணிந்து உறுப்புகளால் நற்கருமங்களை நயமுடன் வெளிப்படையாகச் செய்யாமலிருப்பவர்களிடம் எவ்வளவு பெரிய அற்புதங்கள் காணப்பட்டாலும் விசேஷமான ஒளிவுகள் காணப்பட்டாலும் அவர்கள் கெட்டவர்களே. வழி பிசகிய அவர்கள் முனிவடைந்து ஸ(Q)கர் என்ற நரகத்தில் வீழ்வார்கள்.

## துஷ்டரை விட்டு விலகவும்

இந்த தீன் பயிர் விளைத்த நபி
இருகால் சுரக்கவும் வணங்கிலையோ
பந்தம் போல் வதனமுள்ள ஷைகு
பக்ராம் முஹ்யித்தீன் தொழுதிலையோ
சொந்தத் தொழுகையை விட்டோருடன்
தூய்ய நபி வெட்டிப் பொருதிலையோ
இந்தப் பொல்லாத ஞானியுடன்
இணங்கிக் கூடினோர் வழிகேடரே (37)

இந்த சத்திய இஸ்லாமிய மார்க்கப் பயிரை விளைவித்த நபி நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய இரு பாதங்களும் சுரந்து வீங்கிப் போகின்ற மட்டிலும் நின்று வணங்கவில்லையா? பொன்போன்ற வதனமுள்ள மகத்துவமிக்க பெரியார் குத்புல் அக்தாபு கௌதுல் அ.்.ஃளம் முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி (றலி) அவர்கள் தொழுது வணங்கவில்லையா? முஸ்லிம்களது சொந்த அடையாளமான தொழுகையை விட்டிருந்தோரை, தூய நபிநாயகம் (ஸல்) போர் செய்து வெட்டி வீழ்த்தவில்லையா? எனவே, தொழுகையை விட்டு வழிகெட்டுப் போன இந்த பொல்லாத போலி ஞானிகளுடன் இணங்கி சகவாசிப்பவர்களும் வழிகேடர்களேயாவர். எனவே, இந்தத் துஷ்டர்களைக் கண்டாலும் தூரவிலக வேண்டும்.

## எல்லாம் இதற்குள்ளே

**அல்லாஹ் யாஹூ யாஹூக்குஹூ**
**ஆனதிக்றாகும் ஹக்கிடத்தில்**
**பொல்லா ஞானி சொல் யாவுமது**
**பொருத்தக் கேடுண்டாய் வழி கெட்டோர்கள்**
**சொல்லாய்ச் சேர்த்து ஏற்படுத்தி வைத்து**
**சொந்தமுரீ தான பேர்கள் தம்மை**
**எல்லாமி தற்குள்ளே அடங்கிப் போயிற்**
**றென்று சொல்லியே கெடுத்துப்போட்டார் (38)**

அல்லாஹூ, யாஹூ, யாஹூக்குஹூ போன்ற திக்ருகளெல்லாம் அல்லாஹ்வுக்கு உகந்த திக்ருகளே,ஆனால், ஷரீ அத்துக்கு நேர்முரணாக நடந்துவரும் இந்த கள்ள ஞானிகள் தங்கள் பிரியம் போல சில சொற்களை திக்ரு என்பதாக ஏற்படுத்தி வைத்துக்கொண்டு, "தொழுகை, நோன்பு, ஸகாத்து, ஹஜ்ஜு முதலிய எல்லாம் அதற்குள் அடங்கி போயிற்று. ஆகவே இந்த நமது திக்ரைத் தவிரவேறு வணக்கங்கள், தொழுகைகள் நடத்த தேவையில்லை. ஹக்கிடம் மிகசிறந்த திக்றாகும் இது", என்று தங்களுடைய முரீதுகளிடம் கூறி பொருத்தக் கேடான முறையில் அந்த அஞ்ஞானிகள் ஷரீ அத்தை விட்டு தாங்களும் வழி கெட்டு மற்றவர்களையும் வழி கெடுத்து விட்டார்கள்.

## நல் திக்ரு செய்வீர்

**அல்லாஹ்தனில் ஹூவை முஹம்மதுவில்**
**அவ்வல் மீமான எழுத்ததனை**
**கல்லாதவர்கள் தானொன்றாய்ச் சேர்த்து**
**கனந்த திக்ரென்றே அடக்கியதை**
**நல்லார் பெரியோர்களெவர்கள் தானும்**



**நயமென்று சொல்லாச் சொல்லதாகும்**
**எல்லாமு.்.மின்கள் முஸ்லிம்களே**
**இதைவிட்டகன்று நல்.்.திக்ருசெய்வீர் (39)**

சம்பூரணம் (காமில்) ஆகாத தன்மையுள்ள அந்தப் போலி ஞானிகள், ஷரீ அத்து - தரீகத்து பற்றிய எத்தகைய அறிவு, ஞானமும் பெற்றுக் கொள்ளாத நிலைமையில் சொந்த அபிப்பிராயப்படி அல்லாஹு என்பதன் ஹுவையும் முஹம்மது என்பதின் முதல் எழுத்தான மீமையும் தனித்தெடுத்து ஹும் என்ற பதத்தை சேர்த்து, இதுதான் திக்ருகளிலெல்லாம் மிகவும் மகத்துவமானது. நீங்கள் தொழ வேண்டியதில்லை. ஷரீ அத்துப்படி நடக்க வேண்டியதில்லை. என்று மனம் துணிந்து இஷ்டம் போல் கூறிக்கொண்டு திரிகிறார்களள். பெரியோர்கள் யாரும் இவர்களுடைய இந்த போக்கினை நல்லது என்று சொல்லவில்லை.எனவே அன்பிற்குரிய மு.்.மின்களே! முஸ்லிம்களே ! இத்தகைய அஞ்ஞானிகளின் விபரீத திக்ரை விட்டு நீங்கி சம்பூரணத் தன்மை பெற்ற (காமிலான) மெஞ்ஞானிகளைப் பின்பற்றி நல்ல திக்ருகளைச் செய்வீர்களா!க ஷரீ அத்தையும் பேணி நடப்பீர்களாக!

## ஆமீன்.

**முஸ்லிம் தனக்கெடுக்கும் ஞானர் தம்மை**
**முனிவாய் ஹலாக்காக்கு முதலவனே**
**குஷியாய்த் தினமஞ்சி ஐந்துந்தொழ**
**கொற்றவா துணை அருளிச்செய்வாய்**
**பசியைத் தாகத்தை நீக்கி வைத்து**
**பண்பாய் ஈமானின் கலிமாதன்னை**
**விசுவாசமாகச் சொல்லும்படி**
**மீளும் ஸகராத்திலுதவு ஆமீன். (40)**

"முதல்வனாகிய அல்லாஹ்வே முஸ்லிம்களைக் கெடுத்து பாழாக்கும் இந்த கசட்டு அஞ்ஞானிகளை நீ முனிவுடன் அழித்து விடு! மனமகிழ்ந்து, பக்தியுடன் அஞ்சி உன்னைத் தவறாமல் ஐந்து வேளைகளிலும் தொழுது வழிபட ராஜாதி ராஜனே, எங்களுக்கு நீ அருள் செய்! வறுமையுற்று பசியாலும், தாகத்தாலும் வாடி வதங்கச் செய்யாமல் எங்களுக்கு ஆகாரத்திலும், வாழ்விலும் நீ பரகத்து செய்திடு! மரணத் தருவாயிலும் ஈமானின் கலிமாவை பண்புடன் விசுவாசமாகச் சொல்லும்படிச் செய்து எங்களது ஸகராத்தில் உதவி செய்திடு!" ஆமீன், ஆமீன், யாரப்பல் ஆலமீன்.